
# ஹிந்து சமயமும் ஹிந்து மக்களும்



ஸ்வாமி பூமானந்த தீர்த்தர்

# வாசகர்களுக்கு

வழிபடுவதும், துதிப்பதும் மக்களின் இயல்பு. புகழ்மிக்க, மேன்மையான, அபூர்வமான மனிதர்களை கண்டால் அவர்கள் மனதில் வியப்பை எழுப்பிவிடுகிறது. அந்த உணர்ச்சியை வெளிப்படுத்த விருப்பம் தோன்றுகிறது. மனிதனுக்கே அப்படியானால், இந்த முழு உலகைப் படைத்த கடவுளின் மேல் தன் பாராட்டுணர்வை வெளிப்படுத்த மனசு எந்த அளவுக்கு உந்தப்படும் ! தங்கள் பணிவையும், பாராட்டுதலையும், பற்றையும், விசுவாசத்தையும் வெளியிட, மக்கள் பலவகையான வழிகளை நாடுகிறார்கள்.

வழிபாட்டிலும், துதிப்பதிலும், மன எழுச்சிதான் முதலில் வருவது, சிந்தனையும், விசாரமும் பின்புதான். இதன் விளைவாக குறிப்பிடத்தக்க இடைவெளி மனிதனின் தனித்துவத்தில் ஏற்படுகிறது, குறிப்பாக வழிபடும் பொது மக்களிடத்தில். இந்த இடைவெளியை மக்களின் கவனத்திற்கு கொண்டுவந்து, மக்களை உண்மையான தெய்வத்தன்மையைப் பற்றி எண்ணவைத்து, பிழை நீக்கப்பட்டு தெளிவையும், நேர்த்தியையும் அடைய வழிசெய்யும் சரியான வழிபாட்டு முறையை பின்பற்ற வைப்பதே உண்மையான மதத்தின் முயற்சியாக இருந்து வருகிறது.

ஆதி காலத்தில் கங்கை கரையில் வாழ்ந்த சிந்தனையாளர்களின் மனதில் உதித்ததுதான் அறிவைத் தரும் வேதம். அதன் முற்பகுதியில் பின்பற்ற வேண்டிய கர்ம முறைகளும், அனுஷ்டானங்களும் உள்ளன. பிற்பகுதி, தத்துவங்கள் நிறைந்த உபநிஷத்து என்ற பெயரிலுள்ள வேதாந்தத்தை கொண்டுள்ளது. இந்த வேதங்கள்தான் ஹிந்து சமயத்தின் அடிப்படை நூலும், தத்துவ விசாரமுமாகும்.

வேதமும், வேதாந்தமும் சொல்லுகிற விதிகளையும், அனுஷ்டானங்களையும் எல்லோராலும் அனுசரிக்க முடியாது. ஆனால் எல்லோருக்கும் அவைகளின் பயன்கள் கிட்டவேண்டும். அதற்காகதான் எல்லோரும் வந்து ஆராதிக்க வசதியாக கோவில், குளம், அர்ச்சனை போன்ற கலாச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் தங்களின் பிரச்சினைகளை மனம் விட்டு வெளிப்படுத்தவும், சந்தோஷத்தை தெரியப்படுத்தவும் கோவில்கள் சகாயமாக இருக்கின்றன. இந்த கோவில்கள் தான் ஹிந்து சமயத்தின் ஆதாரம். இவைகளை நன்றாக உபயோகித்து, நம் கலாச்சாரத்தை பத்திரமாக வைக்க வேண்டிய கடமை எல்லா ஹிந்து மக்களுக்கும் உண்டு.

கடவுள், மனிதன், உலகம் போன்றவற்றைப் பற்றிய தங்களின் பலவித கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் பதில் கிடைக்க, மக்கள் கோவில்களை அணுக முடியாது. ஆஸ்ரமங்களே அதற்காக அமைக்கப்பட்ட இடங்கள். தபஸ்விகளையும், ஞானிகளையும் சுற்றி வளர்ந்தவைகள்தான் ஆஸ்ரமங்கள். கோவில்களும், ஆஸ்ரமங்களுமே ஹிந்து தர்மத்தையும், கலாச்சாரத்தையும், மக்களையும் காப்பாற்றி வரும் இடங்கள். இவைகளை நன்றாக பரிபாலிக்க மக்கள் அக்கரை கொள்ளவேண்டும்.

வீடுகளிலும், கோவில்களிலும், அனுசரிக்கப்படும் வைதீக பழக்க வழக்கங்கள், சமய சடங்குகள், விசேஷ தினக் கொண்டாட்டங்கள், போன்றவை ஆசாரங்கள் ஆகும். ஆனால் சில வயதிற்கு பிறகு, மனம் பக்குவமடைந்து ஆசாரத்தை விட்டு, உயர்ந்து, தத்துவ விசாரத்தை நாட வேண்டும். அதுதான் வாழ்க்கை முழுநிறைவு பெற ஏதுவாகும்.

தத்துவ விசாரத்தில் மக்களுக்கு வழிகாட்ட ஆஸ்ரமத்தில் உள்ள ஞானிகள் தயாராக இருக்கிறார்கள். அவர்களை நாடி மக்கள் ஆசாரத்திலிருந்து விசாரத்திற்கு உயர முயற்சிக்க வேண்டும்.

கோவிலுக்குப் போய் செய்யும் பக்தியையும், ஆராதனையையும் பற்றிய விசாரத்தையும் நாம் தவிர்க்க முடியாது. ஆழ்ந்து ஆலோசித்துப் பார்த்தால் உண்மையான பக்தி என்னவென்று விளங்கும். பக்தியினால் மனம் நிறைவடைய வேண்டும். அந்த நிறைவினால் எங்கும் கடவுளைக் காண முடியும்.

இதில் சொன்னவைகளை நன்றாக புரிந்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி, எல்லோரிடமும் அன்புடனும் ஆதரவுடனும் இருந்து கொண்டு நல்ல பக்தியுடனும் மன அமைதியுடனும் வாழுங்கள்.

ஸ்வாமி பூமானந்த தீர்த்தர்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வேதம் தோன்றியது | 1 |
| 2. | கோவில்களின் முக்கியத்துவம் | 3 |
| 3. | ஆசிரமங்களின் அவசியம் | 4 |
| 4. | எல்லையற்ற மனம் | 6 |
| 5. | ஆசாரத்திலிருந்து விசாரத்திற்கு | 8 |
| 6. | உண்மையான பக்தி | 10 |
| 7. | முடிவுரை | 14 |

# ஹிந்து சமயமும் ஹிந்து மக்களும்

## 1. வேதம் தோன்றியது

ஹிந்து சமயம் என்றால் என்ன? ஹிந்துக்கள் யார் என்று கேட்டால் பதில் சொல்லுபவர்கள் மிகவும் குறைவு. ஏன்? இந்த விஷயத்தைப் பற்றி யாருமே நினைப்பதும், பேசுவதும் கிடையாது. இதைப்பற்றி தெரிந்தவர்களும் மிகவும் குறைவு. இந்த குறைவை கொஞ்சமாவது நீக்கமுடியுமா என்று பார்ப்பதற்குத்தான் இந்த சிறிய புத்தகம். சில கேள்விகளும், பதில்களும் மூலமாக சமயம் என்பதையும், ஹிந்து மக்களைப்பற்றியும் சில வரிகளில் விளக்க முயற்சிக்கிறோம்.

ஹிந்து சமயத்தை சமயம் என்று சொல்வதே சரியல்ல. காரணம், எல்லா சமயத்திற்கும் அடிப்படை கடவுள்தான். கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் சமயங்களெல்லாமே நிற்கின்றன. ஹிந்து தர்மம் அப்படியல்ல. கடவுள் நம்பிக்கையைப் போல் அல்லாமல், அது தன்னிடத்தில், தன்னுள்ளத்தின் உள்ளேயுள்ள ஆத்மாவை நம்புவதுதான் ஹிந்து தர்மத்தினுடைய கருத்து . மற்றெல்லாவற்றையும் போல கடவுள் நம்பிக்கையையும், ஹிந்து தர்மம், என்ன, எப்படி, மற்றும் அதனுடைய கருத்து என்னவென்று கேட்பதற்கு கொஞ்சமும் தயங்குவதேயில்லை. இது மிகவும் முக்கியமும், ஆச்சரியமும்தான்.

சரித்திரம் ஆரம்பிப்பதற்கு எத்தனையோ காலங்கள் முன்பாக கங்கை நதிக்கரையினிலே வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் மனித வாழ்கையைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும் ஆழமாக சிந்திக்கத் துவங்கினார்கள். மனிதனுடைய புத்தி விசாரமும், தத்துவ விசாரமும் செய்வதற்குதானே? மனித வாழ்க்கையினுடைய அர்த்தம் என்ன? சுற்றுமுள்ள மற்ற பிராணிகளைப்போல அல்லவே மனிதன். நம்மைப்போல் அவைகளுக்கும் உடம்பும், இந்திரியங்களும் உள்ளன. ஆனால் மிருகங்கள் மற்றும் பறவைகளுக்கில்லாத மனமும், புத்தியும் மனிதனுக்குள்ளதென்பதுதானே அவனுடைய சிறப்பு. அதனாலே இம்மாதிரியான சிந்தனைகள் மனித வாழ்க்கைக்கு உகந்ததுதான்.

இது ஒரு பக்கமிருக்க, இன்னொரு சிந்திக்க வேண்டிய விஷயம் இருக்கிறது. மனமும், புத்தியுமுள்ள மனிதனுக்கு, தகுதியில் தனக்கு மேலேயுள்ள யாரையாவது காணும் போது மனதில் உடனே தோன்றுபவைதான் பணிவும், மரியாதையும். கைகூப்புவது, வணங்குவது இவையெல்லாமே பணிவின் வெளிப்பாடுகள்தான். இவைகள்தான் அக்காலத்து கங்கைக்கரை மக்களும் செய்தார்கள்.

மனிதன் மிகவும் சிறியவன். தன்னைச் சுற்றிலும், மேலும் பார்த்தால் எல்லாமே மிகப்பெரியவை. இயற்கை மிகவும் சிறப்புள்ளது. நாமிருக்கும் இப்பூமி எல்லையற்றது!! பூமியின் மீது பரவிக் கிடக்கின்ற சமுத்திரமோ! அதுவும் எல்லையற்றதுதான். சுற்றுமுள்ள காற்று ? -- அதையும்விட எல்லைகடந்தது. பகல் முழுவதும் வெளிச்சமும், வெப்பமும் தந்து உயிருள்ள எல்லாவற்றையும் வாழ வைக்கின்ற சூரியன், இரவு நேரங்களில் வெளிவருகிற சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய எல்லாமே எத்தனை எத்தனை தூரத்திலுள்ளன. அதனால் அவை எந்த அளவு பெரிதாக இருக்கவேண்டும். காற்றும், வெளிச்சமும், வெப்பமும், மழையும், நீரும் -- இவையெல்லாவற்றையும் அளித்து நம்மை காப்பாற்றுகின்ற இந்த இயற்கைச் செல்வங்கள் எல்லாமே நமக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் செய்து தந்து என்றுமே உடனிருப்பவைதான். இவைகளையெல்லாம் நாம் வாழ்த்த வேண்டாமா? எவ்வளவு இயலுமோ, அவ்வளவு துதிகள் செய்வதுதான் நமது கடமை. அதுவே நமக்கு ஆபரணமும் கூட.